


**பிரிவு R12,R13 & R14**

# திருமுறை ஓதும் போட்டிக்குரிய பஞ்சபுராணப் பாடல்கள்

**(2018)**

## திருமுறை மாநாடு ஏற்பாட்டுக் குழு

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R12, R13 & R14

## (02-01-2002 க்கு முன் பிறந்தவர்கள்)

## (பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

## ( இங்கு கொடுக்கப்பட்டுள்ள பாடல்களிலிருந்து மட்டும் 5 பாடல்களை தேர்ந்தெடுத்து பயின்று வரவும் )

1. விரும்பிய ஒரு தேவாரப்பாடல்
   ( 1 - 30)
   (ஒன்றாம் திருமுறை முதல் ஏழாம் திருமுறை வரை)
2. விரும்பிய ஒரு திருவாசகப்பாடல் (எட்டாம் திருமுறை)
   ( 31 - 40)
3. விரும்பிய ஒரு திருவிசைப்பா பாடல் ( ஒன்பதாம் திருமுறை)
   ( 41 - 45)
4. விரும்பிய ஒரு திருப்பல்லாண்டு பாடல் (ஒன்பதாம் திருமுறை)
   ( 46 - 50)
5. விரும்பிய ஒரு பெரியபுராணப் பாடல்( பன்னிரண்டாம் திருமுறை )
   ( 51 - 60)

திருச்சிற்றம்பலம்

# தேவாரம்

## திருஞானசம்பந்தர் அருளியது

**தேவாரம்: 1**

**பண் : நட்டபாடை** திருமுறை: 1-4-1

திருச்சிற்றம்பலம்

மைம்மரு பூங்குழற் கற்றைதுற்ற வாணுதன் மானவிழி மங்கையோடும்
பொய்ம்மொழி யாமறை யோர்களேத்தப் புகலி நிலாவிய புண்ணியனே
எம்மிறை யேயிமை யாதமுக்க ணீசவெ னேசவி தென்கொல்சொல்லாய்
மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே.

திருச்சிற்றம்பலம்

**தேவாரம்: 2**

**பண் : நட்டபாடை** திருமுறை: 1-6-1

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதும்நாவர் அந்தணர் நாளும் அடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்

செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 3

பண் : தக்கராகம் திருமுறை: 1-27-1

திருச்சிற்றம்பலம்

முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே. 1-27-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 4

பண் : பழந்தக்கராகம் திருமுறை: 1-60-1

திருச்சிற்றம்பலம்

வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க விசைபாடு மளியரசே யொளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 5

பண் : பழந்தக்கராகம் திருமுறை: 1-61-1

திருச்சிற்றம்பலம்

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 6

பண் : தக்கேசி திருமுறை: 1-69-1

திருச்சிற்றம்பலம்

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க் கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணா மலையாரே. 1-69-1

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 7**
**பண் : வியாழக்குறிஞ்சி திருமுறை: 1-112-1**

**திருச்சிற்றம்பலம்**

**இன்குர லிசைகெழும் யாழ்முரலத்**
**தன்கர மருவிய சதுரனகர்**
**பொன்கரை பொருபழங் காவிரியின்**
**தென்கரை மருவிய சிவபுரமே. 1-112-1**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 8**
**பண் : வியாழக்குறிஞ்சி திருமுறை: 1-116-1**

**திருச்சிற்றம்பலம்**

**அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்**
**உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே**
**கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்**
**செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 9**
**பண் : மேகராகக்குறிஞ்சி திருமுறை: 1-130-1**

**திருச்சிற்றம்பலம்**

**புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மேலுந்தி**
**அலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில்**
**வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்**
**சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே.**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 10**
**பண் : மேகராகக்குறிஞ்சி திருமுறை: 1-135-11**

**திருச்சிற்றம்பலம்**

**செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்**
**செல்வர்மேற்சிதை யாதன**
**செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்**
**செல்வமாமிவை செப்பவே. 1-135-11**

**திருச்சிற்றம்பலம்**

தேவாரம்: 11

பண் : யாழ்முரி திருமுறை: 1-136-1

திருச்சிற்றம்பலம்

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலைமக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசைபாடவு மாடுவ
ரவர்படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறைவண்டறை
யெழில் பொழில் குயில் பயில்தருமபு ரம்பதியே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 12

பண் : சீகாமரம் திருமுறை: 2-43-1

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 13

பண் : சீகாமரம் திருமுறை: 2-47-2

திருச்சிற்றம்பலம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 14

பண் : சீகாமரம் திருமுறை: 2-48-1

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்

பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 15

பண் : சீகாமரம் திருமுறை: 2-50-1

திருச்சிற்றம்பலம்

குன்ற வார்சிலை நாண ராவரி வாளி கூரெரி காற்றின் மும்மதில்
வென்றவா றெங்ஙனே விடையேறும் வேதியனே
தென்ற லார்மணி மாட மாளிகை சூளி கைக்கெதிர் நீண்ட
பெண்ணைமேல்
அன்றில் வந்தணையும் ஆமாத்தூ ரம்மானே. 1-50-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 16

பண் : காந்தாரம் திருமுறை: 2-65-1

திருச்சிற்றம்பலம்

கறையணி வேலிலர் போலுங் கபாலந் தரித்திலர் போலும்
மறையு நவின்றிலர் போலு மாசுண மார்த்திலர் போலும்
பறையுங் கரத்திலர் போலும் பாசம் பிடித்திலர் போலும்
பிறையுஞ் சடைக்கிலர் போலும் பிரம புரமமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 17

பண் : காந்தாரம் திருமுறை: 2-68-1

திருச்சிற்றம்பலம்

வானமர் திங்களு நீரு மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத் தேவர் தொழப்படு வானைக்
கானம ரும்பிணை புல்கிக் கலைபயி லுங்கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத் தாள்தொழ வீடெளி தாமே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 18

பண் : காந்தாரம் திருமுறை: 2-80-1

திருச்சிற்றம்பலம்

வரிய மறையார் பிறையார் மலையோர்சிலையா வணக்கி
எரியமதில்கள் எய்தார் எறியுமுசலம் உடையார்

கரியமிடறும் உடையார் கடவூர்மயானம் அமர்ந்தார்
பெரியவிடைமேல் வருவார் அவரெம்பெருமான் அடிகளே. 2-80-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 19

பண் : நட்டராகம் திருமுறை: 2-99-1

திருச்சிற்றம்பலம்

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 20

பண் : நட்டராகம் திருமுறை: 2-111-1

திருச்சிற்றம்பலம்

தளிரிள வளரென வுமைபாடத் தாளம் மிடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியர வரையார்த் தாடும் வேடக் கிறிமையார்
விளரிள முலையவர்க் கருணல்கி வெண்ணீ றணிந்தோர் சென்னியின்மேல்
வளரிள மதியமொ டிவராணீர் வாய்மூ ரடிகள் வருவாரே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 21

பண் : நட்டராகம் திருமுறை: 2-106-1

திருச்சிற்றம்பலம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே. 2-106-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 22

பண் : காந்தார பஞ்சமம் திருமுறை: 3-1-1

திருச்சிற்றம்பலம்

ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர் அந்த ணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடி னாய்இட மாநறுங் கொன்றை நயந்தவனே
பாடி னாய்மறை யோடுபல் கீதமும் பல்ச டைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடி னாய்அரு ளாய்சுருங்கஎம தொல்வினையே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 23

பண் : காந்தார பஞ்சமம் திருமுறை: 3-2-1

திருச்சிற்றம்பலம்

பந்து சேர்விர லாள்பவ ளத்துவர்
வாயி னாள்பனி மாமதி போன்முகத்
தந்த மில்புக ழாள்மலை மாதொடும் ஆதிப்பிரான்
வந்து சேர்விடம் வானவர் எத்திசையுந்
நிறைந் துவலஞ் செய்து மாமலர்
புந்தி செய்திறைஞ் சிப்பொழி பூந்தராய் போற்றுதுமே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 24

பண் : காந்தார பஞ்சமம் திருமுறை: 3-4-1

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 25

பண் : கொல்லி திருமுறை: 3-26-1

திருச்சிற்றம்பலம்

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழிற் கானப்பேர் அண்ணல்நின்
அடியலால் அடைசரண் உடையரோ வடியரே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 26

பண் : கொல்லி திருமுறை: 3-39-1,11

திருச்சிற்றம்பலம்

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே. 3-39-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 27

பண் : பஞ்சமம் திருமுறை: 3-57-1

திருச்சிற்றம்பலம்

விடையவன் விண்ணுமண்ணுந் தொழ நின்றவன் வெண்மழுவாட்
படையவன் பாய்புலித்தோ லுடை கோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன் சசி தங்கிய சங்கவெண்டோ
டுடையவன் னூனமில்லி யுறை யும்மிட மொற்றியூரே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 28

பண் : பஞ்சமம் திருமுறை: 3-62-1,11

திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினான் திகழ் கையிலொர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை ஈச்சரமே. 3-62-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 29

பண் : பஞ்சமம் திருமுறை: 3-63-1

திருச்சிற்றம்பலம்

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே .

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 30

பண் : சாதாரி திருமுறை: 3-69-1

திருச்சிற்றம்பலம்

வானவர்கள் தானவர்கள் வாதைபட வந்ததொரு மாகடல்விடம்
தானமுது செய்தருள் புரிந்தசிவன் மேவுமலை தன்னைவினவில்
ஏனமிள மானினொடு கிள்ளைதினை கொள்ளவெழி லார்கவணினால்
கானவர்த மாமகளிர் கனகமணி விலகுகா ளத்திமலையே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 31

பண் : பழம்பஞ்சுரம் திருமுறை: 3-115-1

திருச்சிற்றம்பலம்

ஆலநீழ லுகந்த திருக்கையே யானபாட லுகந்த திருக்கையே
பாலினேர்மொழி யாளொரு பங்கனே பாதமோதலர் சேர்புர பங்கனே
கோலநீறணி மேதகு பூதனே கோதிலார்மன மேவிய பூதனே
ஆலநஞ்சமு துண்ட களத்தனே யாலவாயுறை யண்டர் களத்தனே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 32

பண் : புறநீர்மை திருமுறை: 3-120-1

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவா யாவது மிதுவே.

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசர் அருளியது

தேவாரம்: 33

பண்: கொல்லி திருமுறை: 4-1-1,6

திருச்சிற்றம்பலம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை அம்மானே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 34

பண் : காந்தாரம் திருமுறை: 4-2-1

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 35

பண் : காந்தாரம் திருமுறை: 4-5-1

திருச்சிற்றம்பலம்

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூ ரரைக்
கையினாற் றொழா தொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 36

பண்: காந்தாரபஞ்சமம் தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. 4-11-01

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 37

பண் : பழந்தக்கராகம் திருமுறை: 4-12-1

திருச்சிற்றம்பலம்

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கண் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்

பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 38

பண் : பழந்தக்கராகம் திருமுறை: 4-12-1,10

திருச்சிற்றம்பலம்

வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே. 4-12-10

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 39

பண் : குறிஞ்சி திருமுறை: 4-21-1

திருச்சிற்றம்பலம்

முத்துவிதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தனாஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம் 4-21-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 40

திருமுறை: 4-38-10

திருச்சிற்றம்பலம்

இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாங் கடுநர கங்கள் வைத்தார்
பரப்புநீர் கங்கை தன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்
அரக்கனுக் கருளும் வைத்தார் ஐயனை யாற னாரே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 41

திருநேரிசை திருமுறை: 4-62-1

திருச்சிற்றம்பலம்

வேதியா வேத கீதா விண்ணவ ரண்ணா வென்றென்
றோதியே மலர்கள் தூவி யொருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடும்
ஆதியே யால வாயில் அப்பனே யருள்செ யாயே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 42

திருவிருத்தம் திருமுறை: 4-81-1,8,10

திருச்சிற்றம்பலம்

படைக்கல மாகவுன் னாமத் தெழுத்தஞ்சென் நாவிற்கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் பும்முனக் காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் றொழுது வணங்கித் தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தரனே. 4-81-8

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 43

திருவிருத்தம் திருமுறை: 4-109-1

திருச்சிற்றம்பலம்

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 44

திருமுறை: 4-112-9

திருச்சிற்றம்பலம்

சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு மாகி லவன்றனையான்
பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னா ளழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 45

திருக்குறுந்தொகை திருமுறை: 5-2-1

திருச்சிற்றம்பலம்

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ. 5-2-1

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 46**

**திருகுறுந்தொகை** **திருமுறை: 5-2-2**

**திருச்சிற்றம்பலம்**

**தீர்த்த னைச்சிவ னைச்சிவ லோகனை**
**மூர்த்தி யைமுத லாய ஒருவனைப்**
**பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்**
**கூத்த னைக்கொடி யேன்மறந் துய்வனோ.**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 47**

**திருக்குறுந்தொகை** **திருமுறை: 5-5-5**

**திருச்சிற்றம்பலம்**

**தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்**
**நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்**
**ஆடிப் பாடியண் ணாமலை கைதொழ**
**ஓடிப் போம்நம துள்ள வினைகளே.5-5-5**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 48**

**திருகுறுந்தொகை** **திருமுறை: 5-12-1**

**திருச்சிற்றம்பலம்**

**கரைந்து கைதொழு வாரையுங் காதலன்**
**வரைந்து வைதெழு வாரையும் வாடலன்**
**நிரந்த பாரிடத் தோடவர் நித்தலும்**
**விரைந்து போவது வீழி மிழலைக்கே.**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 49**

**திருகுறுந்தொகை** **திருமுறை: 5-39-1**

**திருச்சிற்றம்பலம்**

**கொள்ளுங் காதன்மை பெய்துறுங் கோல்வளை**
**உள்ள முள்கி யுரைக்குந் திருப்பெயர்**
**வள்ளல் மாமயி லாடு துறையுறை**
**வெள்ளந் தாங்கு சடையனை வேண்டியே.**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 50**

**திருக்குறுந்தொகை** **திருமுறை: 5-42-1**

**திருச்சிற்றம்பலம்**

**நன்று நாடொறும் நம்வினை போயறும்**
**என்று மின்பந் தழைக்கவி ருக்கலாம்**
**சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை**
**துன்று பொற்சடை யானைத் தொழுமினே. 5-42-1**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 51**

**திருகுறுந்தொகை** **திருமுறை: 5-60-3**

**திருச்சிற்றம்பலம்**

**சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்**
**கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்**
**பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்**
**மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 52**

**திருகுறுந்தொகை** **திருமுறை: 5-95-4**

**திருச்சிற்றம்பலம்**

**நெய்யும் பாலுங்கொண் டாட்டி நினைந்திலர்**
**பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்**
**ஐயன் வெய்ய அழல்நிற வண்ணனை**
**மெய்யைக் காணலுற் றாரங் கிருவரே.**

**திருச்சிற்றம்பலம்**

**தேவாரம்: 53**

**திருத்தாண்டகம்** **திருமுறை: 6-1-5**

**திருச்சிற்றம்பலம்**

**அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்**
**அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி**
**வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு**
**வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்**
**பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்**

பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே
திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 54
திருத்தாண்டகம் : திருமுறை: 6-8-5
திருச்சிற்றம்பலம்
மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி னுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே 6-8-5
திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 55
திருத்தாண்டகம் திருமுறை: 6-18-4
திருச்சிற்றம்பலம்
படைமலிந்த மழுவாளும் மானுந் தோன்றும்
பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையி னொலிதோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமும் கீளுந் தோன்றும்
மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே
திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 56
திருத்தாண்டகம் திருமுறை: 6-23-1
திருச்சிற்றம்பலம்
தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்

காண்டற் கரிய கடவுள் கண்டாய்
    கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
    மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
    மறைக்காட் டுறையும் மணாளன் தானே
திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 57

திருத்தாண்டகம் திருமுறை: 6-38-1

திருச்சிற்றம்பலம்

ஓசை யொலியெலா மானாய் நீயே
    உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
    மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
    பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
    திருவையா றகலாத செம்பொற் சோதீ 6-38-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 58

திருத்தாண்டகம் திருமுறை: 6-95-10

திருச்சிற்றம்பலம்

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
    தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
    மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
    ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
    அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 59

திருத்தாண்டகம் திருமுறை: 6-98-1

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 60

திருத்தாண்டகம் திருமுறை: 6-99-1

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே

திருச்சிற்றம்பலம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

தேவாரம்: 61

பண்:இந்தளம் திருமுறை: 7-5-1

திருச்சிற்றம்பலம்

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் காண மில்லைக்
கழல டிதொழு துய்யி னல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட வாடி
ஆழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்

குய்யு மாறொன் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியு ளீரே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 62
பண்: நட்டராகம் திருமுறை: 7-20-1

திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 63
பண்: நட்டராகம் திருமுறை: 7-22-1

திருச்சிற்றம்பலம்

முன்னவன் எங்கள்பிரான் முதல்
காண்பரி தாயபிரான்
சென்னியில் எங்கள்பிரான் திரு
நீல மிடற்றெம்பிரான்
மன்னிய எங்கள்பிரான் மறை
நான்குங்கல் லால்நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள்பிரான் பழ
மண்ணிப் படிக்கரையே 7-22-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 64
பண்: நட்டராகம் திருமுறை: 7-24-1

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 65
பண்: நட்டராகம் திருமுறை: 7-29-1

திருச்சிற்றம்பலம்

இத்தனை யாமாற்றை யறிந்திலேன் எம்பெருமான்
பித்தனே யென்றுன்னைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை  மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 66

பண் : கொல்லி திருமுறை: 7-33-1

திருச்சிற்றம்பலம்

பாறு தாங்கிய காட ரோபடு
    தலைய ரோமலைப் பாவையோர்
கூறு தாங்கிய குழக ரோகுழைக்
    காத ரோகுறுங் கோட்டிள
ஏறு தாங்கிய கொடிய ரோசுடு
    பொடிய ரோஇலங் கும்பிறை
ஆறு தாங்கிய சடைய ரோநமக்
    கடிக ளாகிய அடிகளே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 67

பண்: கொல்லி திருமுறை: 7-34-1,11

திருச்சிற்றம்பலம்

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
    சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
    புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
    ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
    கியாதும் ஐயுற வில்லையே 7-34-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 68

பண் : கொல்லிக் கௌவாணம் திருமுறை: 7-38-1

திருச்சிற்றம்பலம்

தம்மானை யறியாத சாதியா ருளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவி னுரியானைக் கரிகாட்டி லாட
லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தம்மான்தன் அடிக்கொண்டென் முடிமேல்வைத் திடுமென்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோதும் இகழ்வன்போ லியானே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 69

பண்: கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 10

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 70

பண்: பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மைவந்து எய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறையூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 7-48-01

தேவாரம்: 71

பண்: பழம் பஞ்சுரம் திருமுறை: 7-49-1

திருச்சிற்றம்பலம்

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமைசொல்லித்

திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முரு
கன்பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும்
எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானீரே 7-49-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 72

பண்: தக்கேசி திருமுறை: 7-55-2

திருச்சிற்றம்பலம்

வையக முற்று மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே 7-55-2

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 73

பண்: தக்கேசி திருமுறை: 7-59-1

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே 7-59-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 74

பண் : தக்கேசி திருமுறை: 7-62-8

திருச்சிற்றம்பலம்

நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்

தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
    தன்மை யாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
    அங்க ணன்றனை எண்கணம் இறைஞ்சும்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
    கோலக் காவினிற் கண்டுகொண் டேனே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 75
பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஆலம் தானுகந்து அமுதுசெய்தானை
    ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலம் தான்பெரிதும் உடையானைச்
    சிந்திப்பார் அவர் சிந்தையுளானை
ஏல வார்குழலாள் உமைநங்கை
    என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
    காணக் கண்அடியேன் பெற்றவாறே. 01

தேவாரம்: 76
பண்: காந்தாரம் திருமுறை: 7-75-1,10

திருச்சிற்றம்பலம்

மறைக ளாயின நான்கும்
    மற்றுள பொருள்களும் எல்லாத்
துறையும் தோத்திரத் திறையும்
    தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக்
    காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார்
    எம்மையும் ஆளுடை யாரே 7-75-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 77
பண் : புறநீர்மை திருமுறை: 7-83-2

திருச்சிற்றம்பலம்

நின்ற வினைக்கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலரிட்டுச் சூழும் வலஞ்செய்து

தென்றன் மணங்கமழுந் தென்திரு வாரூர்புக்
கென்றன் மனங்குளிர என்றுகொல் எய்துவதே.

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 78

பண் : குறிஞ்சி திருமுறை: 7-89-1

திருச்சிற்றம்பலம்

பிழையுளன பொறுத்திடுவர்
என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே
படலம்என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா
கோயிலுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்
துளோம்போகீர் என்றானே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 79

பண்: குறிஞ்சி திருமுறை: 7-92-1

திருச்சிற்றம்பலம்

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றாய்என் றுன்னையே உள்குகின்றேன் உணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூர்அவி னாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டியே 7-92-1

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 80

பண் : செந்துருத்தி திருமுறை: 7-95-1

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே

திருச்சிற்றம்பலம்

தேவாரம்: 81

பண் : பஞ்சமம் திருமுறை: 7-100-1

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அத
றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயி
னேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த
யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்
தான்மலை உத்தமனே

திருச்சிற்றம்பலம்

# திருவாசகம்
# மாணிக்கவாசகர் அருளியது

திருவாசகம் : 82

திருஅம்மானை திருமுறை: 8-8-8

திருச்சிற்றம்பலம்

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 83

திருக்கோத்தும்பி திருமுறை: 8-10-2

திருச்சிற்றம்பலம்

நானார்என் உள்ளமார் ஞானங்க
ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை

ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையில்
உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே
சென்றூதாய் கோத்தும்பீ
திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 84
அன்னைப்பத்து திருமுறை: 8-17-3
திருச்சிற்றம்பலம்
நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர்ஆ னந்தரால் அன்னே என்னும் .
திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 85
திருச்சாழல்: திருமுறை: 8-12-1
திருச்சிற்றம்பலம்
பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.
திருச்சிற்றம்பலம்
திருவாசகம் : 86
கோயில் திருப்பதிகம் திருமுறை: 8-22-2
திருச்சிற்றம்பலம்
அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான்இதற் கிலன்ஓர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே.

**திருச்சிற்றம்பலம்**

**திருவாசகம் : 87**

**கோயில் மூத்த திருப்பதிகம் திருமுறை: 8-21-1**

**திருச்சிற்றம்பலம்**

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே

**திருச்சிற்றம்பலம்**

**திருவாசகம் : 88**

**வாழாப்பத்து திருமுறை: 8-28-5**

**திருச்சிற்றம்பலம்**

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

**திருச்சிற்றம்பலம்**

**திருவாசகம் : 89**

**அருட்பத்து திருமுறை: 8-29-1**

**திருச்சிற்றம்பலம்**

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்

நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே
திருச்சிற்றம்பலம்

**திருவாசகம் : 90**

**வாழாப்பத்து** **திருமுறை: 8-33-6**

திருச்சிற்றம்பலம்

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே
திருச்சிற்றம்பலம்

**திருவாசகம் : 91**

**கோயில் திருப்பதிகம்** **திருமுறை: 8-22-5**

*திருச்சிற்றம்பலம்*

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீஎன் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக்கேனே.

*திருச்சிற்றம்பலம்*

**திருவாசகம் : 92**

**அடைக்கலப்பத்து** **திருமுறை: 8-24-8**

*திருச்சிற்றம்பலம்*

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின்
மலரடிக்கே

கூவிடுவாய் கும்பிக் கேயிடு வாய்நின்
குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற் கரந்து
பரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே

*திருச்சிற்றம்பலம்*

**திருவாசகம் : 93**

**கண்டப்பத்து** **திருமுறை: 8-31-3**

*திருச்சிற்றம்பலம்*

உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொள்தில்லை கண்டேனே

*திருச்சிற்றம்பலம்*

**திருவாசகம் : 94**

**:திருமுறை: 8-37-3**

திருச்சிற்றம்பலம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே  உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்

**திருவாசகம் : 95**

**பிடித்தப்பத்து** **திருமுறை: 8-37-9**

திருச்சிற்றம்பலம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்

பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறத் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே
திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 96
திருவேசறவு திருமுறை: 8-38-10
திருச்சிற்றம்பலம்
நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்தன்றே வெறுத்திடவே
திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 97
திருப்புலம்பல் திருமுறை: 8-39-3
திருச்சிற்றம்பலம்
உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே
திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 98

திருப்படையாட்சி திருமுறை: 8-49-1

திருச்சிற்றம்பலம்

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்வில்என் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே .

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 99

திருப்பொன்னூசல் திருமுறை: 8-16-1

திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ. 01

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 100

அச்சப்பத்து திருமுறை: 8-36-1

திருச்சிற்றம்பலம்

புற்றில்வாள் அரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி

மற்றும்ஓர் தெய்வம் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. 01

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 101

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட்கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருள் துணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்து அருளுவது இனியே. 01

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 102

திருச்சிற்றம்பலம்

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே

திருவாசகம் : 103

திருச்சிற்றம்பலம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன் எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 01

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் : 104

திருச்சிற்றம்பலம்

செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்து
அம்மை எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 09

திருச்சிற்றம்பலம்

# திருவிசைப்பா

திருவிசைப்பா : 105

திருமாளிகைத் தேவர் அருளியது

கோயில் திருமுறை: 9-1-7

திருச்சிற்றம்பலம்

தனதன்நற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
அம்பலத் தமரர்சே கரனே
நுனகழ லிணையென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா : 106

கோயில் திருமுறை: 9-8-7

திருச்சிற்றம்பலம்

பூத்திரள் உருவம் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரட் பளிங்கிற் றோன்றிய தோற்றந்
தோன்றநின் றவன்வளர் கோயில்
நாத்திரள் மறையோர்ந் தோமகுண் டத்து
நறுநெயால் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே

.திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா : 107

## கருவூர்த்தேவர் அருளியது

திருச்சிற்றம்பலம்

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா : 108

திரைலோக்க்கியம் திருமுறை: 9-12-2

திருச்சிற்றம்பலம்

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா : 109

பூந்துருத்திநம்பி காடநம்பி அருளியது

கோயில் திருமுறை: 9-19-4

திருச்சிற்றம்பலம்

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்
டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் றன்னையும்ஆட்
கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும்அணி
தில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை
யாயிற்றே

திருச்சிற்றம்பலம்

**திருவிசைப்பா : 110**

**பூந்துருத்திநம்பி காடநம்பி அருளியது**

**கோயில்** **திருமுறை: 9-19-5**

**திருச்சிற்றம்பலம்**

களையா உடலோடு சேரமான்
ஆரூரன்
விளையா மதம்மாறா வெள்ளானை
மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா
யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின்
ஆடரங்கே

**திருச்சிற்றம்பலம்**

**திருவிசைப்பா : 111**

**திருவாலியமுதனார்**

**கோயில்** **திருமுறை: 9-23-1**

**திருச்சிற்றம்பலம்**

பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழற்றிருச் சடையுந்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்
டிருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல்மெழு கொக்கின்றதே

**திருச்சிற்றம்பலம்**

**திருவிசைப்பா : 112**

## திருமாளிகை தேவர் அருளியது

**திருச்சிற்றம்பலம்**

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்

தொண்டனேன் விளம்புமா விளம்பே. 01

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா : 113

## சேந்தனார் அருளியது

திருச்சிற்றம்பலம்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே. 02

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா : 114

## திருப்பூந்துருத்தி நம்பி காடநம்பி அருளியது

திருச்சிற்றம்பலம்

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறு அமுதம் ஒத்தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆருர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம் குலாவினரே. 02

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா : 115

## திருவேணாட்டடிகள் அருளிய திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

நின்றுநினைந்து இருந்துகிடந்து எழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றியொருகால் நினையாது இருந்தாலும் இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல் கதறுவித்தி வரவுநில்லாய்
நன்றிதுவோ திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே. 05

திருச்சிற்றம்பலம்

# திருப்பல்லாண்டு

## சேந்தனார் அருளியது

**திருமுறை: 9-29-3**

**திருப்பல்லாண்டு : 116**

**திருச்சிற்றம்பலம்**

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்து உள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்ன நடைமடவாள் உமைகோன் அடியோமுக்கு
அருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 01

**திருப்பல்லாண்டு : 117**

**திருச்சிற்றம்பலம்**

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்காட்
செய்மின் குழாம்புகுந்து
அண்டங்கடந்த பொருள்அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே. 02

**திருச்சிற்றம்பலம்**

**திருப்பல்லாண்டு : 118**

**திருச்சிற்றம்பலம்**

நிட்டையிலா உடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக்கு என் அகம்நெக ஊறும்
அமிர்தினுக்கு ஆலநிழல்
பட்டனுக்கு என்னைத்தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 03

**திருச்சிற்றம்பலம்**

திருப்பல்லாண்டு : 119

திருச்சிற்றம்பலம்

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டில் சிதையும் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 04

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு : 120

திருச்சிற்றம்பலம்

புரந்தரன் மால்அயன் பூசலிட்டு ஓலமிட்டு
இன்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்பஎன் உயிர்ஆண்ட கோவினுக்கு
என்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே. 05

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு : 121

திருச்சிற்றம்பலம்

சேவிக்க வந்தஅயன் இந்திரன் செங்கண்மால்
எங்கும் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழாமாய்
நின்று கூத்தாடும்
ஆவிக்கு அமுதைஎன் ஆர்வத் தனத்தினை
அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்து அப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 06

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு : 122

திருச்சிற்றம்பலம்

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றது
ஆர்பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. 07

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு : 123

திருச்சிற்றம்பலம்

சேலும் கயலும் திளைக்குங்கண்ணார் இளங்
கொங்கையில் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கும் என்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 08

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு : 124

திருச்சிற்றம்பலம்

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 09

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு : 125

திருச்சிற்றம்பலம்

தாதையைத் தாள்அற வீசிய சண்டிக்கு

அவ்வண்டத்தொடும் உடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 10

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு : 126

திருச்சிற்றம்பலம்

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 11

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு : 127

திருச்சிற்றம்பலம்

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே. 12

திருச்சிற்றம்பலம்

திருப்பல்லாண்டு : 128

திருச்சிற்றம்பலம்

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும் எமக்கமுதாம்
எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்

அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்து
ஆண்டுகொண்டு ஆருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே என்று
பல்லாண்டு கூறுதுமே. 13

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

## பெரியபுராணம்

சேக்கிழார் அருளியது

பெரியபுராணம் : 129

திருச்சிற்றம்பலம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 001

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 130

திருச்சிற்றம்பலம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி. 01

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 131
திருமுறை: 12-1-2

திருச்சிற்றம்பலம்

கற்பனை கடந்த சோதி
கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி
யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந்

திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி
.திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 132

திருச்சிற்றம்பலம்

மண்ணி னில்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண்டு ஆர்தல்
உண்மை யாம்எனில் உலகர்முன் வருகஎன வுரைப்பார்

-திருமுறை: 12-1087

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 133

திருச்சிற்றம்பலம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

-திருமுறை: 12-5-252

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 134

திருச்சிற்றம்பலம்

அன்பரங் கிருப்ப நம்பர்
அருளினால் அளகை வேந்தன்
தன்பெரு நிதியந் தூர்த்துத்
தரணிமேல் நெருங்க எங்கும்
பொன்பயில் குவையும் நெல்லும்
பொருவில்பல் வளனும் பொங்க
மன்பெரும் செல்வ மாக்கி
வைத்தனன் மனையில் நீட 12-1-14

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 135

திருச்சிற்றம்பலம்

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டுகாதலின் ஆதனத்து இடைவைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலுவிதத்தில் ஆறுசுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர்நாயகர் தொண்டர் இச்சையில் அமுதுசெய்ய அளித்துளார். 04

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 136

திருச்சிற்றம்பலம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போது உன்அடியின்கீழ் இருக்க என்றார். 60

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 137

திருச்சிற்றம்பலம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில். 0070

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 138

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவல் உறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக்கு உரைசெய்ய ஒண்ணாமை உணராதேன். 001

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 139

திருநாவுக்கரசு நாயனார் புராணம் திருமுறை: 12-21-368

திருச்சிற்றம்பலம்

அண்ண லேஎனை ஆண்டுகொண்

டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி
வேதநா யகனே
கண்ணி னால்திருக் கயிலையில்
இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்
புரிஎனப் பணிந்தார்

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 140

இயற்பகைநாயனார் புராணம் திருமுறை: 12-2-32

திருச்சிற்றம்பலம்

சொல்லுவ தறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ்
சேவடி போற்றி யென்ன

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 141

மெய்பொருள்நாயனார் புராணம் திருமுறை: 12-2-4

திருச்சிற்றம்பலம்

தேடிய மாடும் நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகும் என்று
நாடிய மனத்தி னோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 142

திருஞானசம்பந்த நாயனார் புராணம் திருமுறை: 12-28-1

திருச்சிற்றம்பலம்

வேதநெறி தழைத் தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்ப ரைபொலியப்

புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்
திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 143
திருஞானசம்பந்த நாயனார் புராணம் திருமுறை: 12-28-740
திருச்சிற்றம்பலம்
ஆலமே அமுத மாக
உண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக்
காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக
வேண்டும்நான் மறைக ளேத்துஞ்
சீலமே ஆல வாயில்
சிவபெரு மானே என்றார்
திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 144
தடுத்தாட்கொண்ட புராணம் திருமுறை: 12-5-253
திருச்சிற்றம்பலம்
தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணிலா னந்த அருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்
திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 145
தடுத்தாட்கொண்ட புராணம் திருமுறை: 12-5-148
திருச்சிற்றம்பலம்
பெருகிய நலத்தால் மிக்க
பெருந்திரு நாடு தன்னில்

அருமறைச் சைவ மோங்க
அருளினால் அவத ரித்த
மருவிய தவத்தான் மிக்க
வளம்பதி வாய்மை குன்றாத்
திருமறை யவர்கள் நீடுந்
திருநாவ லூரா மன்றே
திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 147
திருஞானசம்பந்த நாயனார் புராணம் திருமுறை: 12-28-728
திருச்சிற்றம்பலம்
ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி
மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்கமலர்க் கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்
திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 148
திருஞானசம்பந்த நாயனார் புராணம் திருமுறை: 12-28-740
திருச்சிற்றம்பலம்
ஆலமே அமுத மாக
உண்டுவா னவர்க்க ளித்துக்
காலனை மார்க்கண் டர்க்காக்
காய்ந்தனை அடியேற் கின்று
ஞாலம்நின் புகழே யாக
வேண்டும்நான் மறைக ளேத்துஞ்
சீலமே ஆல வாயில்
சிவபெரு மானே என்றார்
திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 149
ஆனாய நாயனார் புராணம் திருமுறை: 12-14-37
திருச்சிற்றம்பலம்

ஆனாயர் குழலோசை
   கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம்
   உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராம்
   கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார்
   மதிநாறும் சடைதாழ

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 150

இயற்பகை நாயனார் புராணம் திருமுறை: 12-3-2-33

திருச்சிற்றம்பலம்

விண்ணிடை நின்ற வெள்ளை
   விடையவர் அடியார் தம்மை
எண்ணிய உலகு தன்னில்
   இப்படி நம்பா லன்பு
பண்ணிய பரிவு கண்டு
   மகிழ்ந்தனம் பழுதி லாதாய்
நண்ணிய மனைவி யோடு
   நம்முடன் போது கென்று

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம் : 151

திருச்சிற்றம்பலம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம். 53

திருச்சிற்றம்பலம்